**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சிவகாசி.**

**முன்னிலை : அ.விஜயபாரதி பி.ஏ.,பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.2, சிவகாசி.

2026 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 06 ஆம் நாள் சனிக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2056, வைகாசி திங்கள் 23 ஆம் நாள்)

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.63/2026**

அரசுக்காக: உதவி ஆய்வாளர்,
திருத்தங்கல் காவல் நிலையம்,
குற்ற எண்.203/2024. .... குற்றமுறையிடுபவர்

/எதிராக/

தங்கப்பாண்டி (வயது 27/2024),
த/பெ.தங்கவேலு,
வடக்குத்தெரு,
கங்காகுளம்,
செங்கமலநாச்சியார்புரம்,
சிவகாசி. .... எதிரி

இவ்வழக்கு 06.06.2026 அன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் எதிரி தானாக முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்...

**தீர்ப்புரை**

இவ்வழக்கின் வாதி தங்கவேலுவும், எதிரி தங்கபாண்டியும் தந்தை மகன் ஆவார்கள். வாதிக்கும் மகனான எதிரிக்கும் மது பழக்கம் உள்ளது. இருவருக்கும் மதுபோதையில் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் கடந்த 15.06.2024 ஆம் தேதி இரவு 23.00 மணியளவில் வாதி வேலையை முடித்து வீட்டிற்கு வந்து வீட்டின் முன்பிருந்த எதிரியை பார்த்து மதுபோதையில் திட்டியுள்ளார். அப்போது எதிரியும் மதுபோதையில் இருந்ததால் வாதியைப் பார்த்து ஏண்டா தேவிடியா பயலே உனக்கெல்லாம் இந்த வயசுல எதுக்குடா பேண்ட் நீ எல்லாம் எதுக்குடா சென்ட் அடிக்குற என அசிங்கமாக பேசி, அருகில் கிடந்த கம்பை எடுத்து வாதியின் தலையில்


VIJAYA BHARATHI
Digitally signed by VIJAYA BHARATHI

அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரியின் குற்றச்செய்கையானது இதச பிரிவுகள் 294(பி), 326 இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என திருத்தங்கல் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இந்த வழக்கானது 25.03.2026 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் வழக்காவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207–இன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கின் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் எதிரியின் மீது குற்றச்சாட்டுக்கள் வனைய போதிய முகாந்திரம் இருப்பதாக கருதியதால் எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(பி), 326 இன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரி தன்னை குற்றவாளி இல்லை என்றார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை வழங்கப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசுத் தரப்பில் தனது வழக்கினை நிரூபணம் செய்யும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>**5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**</u>

அ.சா.1 தங்கவேல் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். எதிரி அடிக்கடி மது அருந்திவிட்டு வந்து என்னிடமும், என் மனைவியிடமும் பிரச்சனை செய்து வந்தான். கடந்த 2024 ஆம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் இரவு 11 மணியளவில் எதிரி மது அருந்திவிட்டு வீட்டு வாசலில் உட்காந்திருந்தான். நான் எதற்காக குடித்துவிட்டு வந்தாய் என்று கேட்டபோது எதிரிக்கும், எனக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் அடையாளம் தெரியாத நபர் என்னை கீழே தள்ளிவிட்டதில் எனக்கு தலையிலும், கையிலும் காயம் ஏற்பட்டது.

காயம்பட்ட நான் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது விசாரிக்க வந்த போலீசாரிடம் சம்பவயிடத்தில் எதிரியும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரி மீது அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலம் கொடுத்தேன். மேற்படி புகார்வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார். எனவே புகார்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 தங்கவேலுவின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.1.** சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 பாண்டியம்மாள் தனது சாட்சியத்தில், அ.சா.1 தங்கவேல் எனது மகன் ஆவார். எதிரி அடிக்கடி மது அருந்திவிட்டு வந்து என்னிடமும், எனது கணவரிடமும் பிரச்சனை செய்து வந்தான். கடந்த 2024 ஆம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் இரவு 11 மணியளவில் எதிரி மது அருந்திவிட்டு வீட்டு வாசலில் உட்காந்திருந்தான். எனது கணவர் எதற்காக குடித்துவிட்டு வந்தாய் என்று கேட்டபோது எதிரிக்கும், எனது கணவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் அடையாளம் தெரியாத நபர் எனது கணவரை கீழே தள்ளிவிட்டதில் எனது கணவருக்கு தலையிலும், கையிலும் காயம் ஏற்பட்டது. சம்பவயிடத்தில் எதிரியும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரி மீது என் கணவர் புகார் கொடுத்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

**5.2.** அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு **311** இன் கீழான மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் பாண்டியராஜன் என்பவருக்காக வழக்கின் ஆவணங்களை பார்வையிட்டு அ.சா.**3** தலைமைக்காவலர் மாயக்கிருஷ்ணன் என்பவர் சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 தலைமைக்காவலர் மாயக்கிருஷ்ணன் தனது சாட்சியத்தில் கடந்த 16.06.2024 ஆம் தேதியன்று மாலை 6.30 மணிக்கு உதவி ஆய்வாளர் பாண்டியராஜன் என்பவர் மருத்துவமனை சென்று அ.சா.1 தங்கவேலுவை விசாரித்தபோது அவர் கொடுத்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து நிலையக் குற்ற எண்.203/2024, இதச பிரிவுகள் 294(பி), 324 இன் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே இரவு 21.00 மணிக்கு

வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் தங்ககருப்பசாமி மற்றும் பழனிக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 மாதிரிவரைபடம் மற்றும் அ.சா.ஆ.5 பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.1 தங்கவேலு, அ.சா.2 பாண்டியம்மாள், செல்வராஜ், மாரீஸ்வரன், முருகன், முனியசாமி, தங்ககருப்பசாமி, பழனிக்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 03.09.2024 ஆம் தேதியன்று காலை 10.30 மணியளவில் நிலையம் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் அ.சா.1 தங்கவேலுக்கு சிகிச்சையளித்த சிவகாசி அரசு மருத்துவர் லட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துபதிவேட்டுடன் கூடிய அ.சா.ஆ.6 காயச்சான்று பெற்றுள்ளார். பின்னர் உதவி ஆய்வாளர் தனது விசாரணையின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 294(பி), 324 என்பதிலிருந்து இதச பிரிவுகள் 294(பி), 326 என மாற்றம் செய்து அ.சா.ஆ.7 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 326 இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6)** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றுகின்ற அம்சங்களை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)–இன் கீழ் விளக்கி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றார். எனவே எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களோ சான்றுப்பொருள்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**<u>7. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் :–</u>**

எதிரியின் மீதான இதச பிரிவு 294(பி), 326 இன் கீழ் குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்துள்ளாரா? என்பதே ஆகும்.

**8.தீர்வுக்குரிய பிரச்சனை :–**

இருதரப்பு வாதங்களும் வழக்கின் சாட்சியங்களும், சான்றாவணங்களும் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

9) எதிரியின் மீதான இதச பிரிவு 294(பி), 326 இன் கீழ் குற்றச்சாட்டுக்கள் குறித்த அரசு தரப்பு சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அ.சா.1 தங்கவேல் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். எதிரி அடிக்கடி மது அருந்திவிட்டு வந்து என்னிடமும், என் மனைவியிடமும் பிரச்சனை செய்து வந்தான். கடந்த 2024 ஆம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் இரவு 11 மணியளவில் எதிரி மது அருந்திவிட்டு வீட்டு வாசலில் உட்காந்திருந்தான். நான் எதற்காக குடித்துவிட்டு வந்தாய் என்று கேட்டபோது எதிரிக்கும், எனக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் அடையாளம் தெரியாத நபர் என்னை கீழே தள்ளிவிட்டதில் எனக்கு தலையிலும், கையிலும் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட நான் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது விசாரிக்க வந்த போலீசாரிடம் சம்பவயிடத்தில் எதிரியும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரி மீது அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலம் கொடுத்தேன். மேற்படி புகார்வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என அரசு தரப்பிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். எனவே புகார்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 தங்கவேலுவின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 பாண்டியம்மாள் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். அ.சா.1 தங்கவேல் தனது கணவர் ஆவார். எதிரி அடிக்கடி மது அருந்திவிட்டு வந்து என்னிடமும், அ.சா.1 தங்கவேல் எனது கணவரிடமும் பிரச்சனை செய்து வந்தான். கடந்த 2024 ஆம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் இரவு 11 மணியளவில் எதிரி மது அருந்திவிட்டு வீட்டு வாசலில் உட்காந்திருந்தான். அ.சா.1 தங்கவேல் ஆன எனது கணவர் எதற்காக குடித்துவிட்டு வந்தாய் என்று கேட்டபோது எதிரிக்கும், அ.சா.1 தங்கவேல் ஆன எனது கணவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் அடையாளம்

தெரியாத நபர் அ.சா.1 தங்கவேல் ஆன எனது கணவரை கீழே தள்ளிவிட்டதில் எனது கணவருக்கு தலையிலும், கையிலும் காயம் ஏற்பட்டது. சம்பவயிடத்தில் எதிரியும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரி மீது என் கணவர் புகார் கொடுத்தார் என அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

11) அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு **311** இன் கீழான மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் பாண்டியராஜன் என்பவருக்காக வழக்கின் ஆவணங்களை பார்வையிட்டு அ.சா.**3** தலைமைக்காவலர் மாயக்கிருஷ்ணன் என்பவர் சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 தலைமைக்காவலர் மாயக்கிருஷ்ணன் தனது சாட்சியத்தில் கடந்த 16.06.2024 ஆம் தேதியன்று மாலை 6.30 மணிக்கு உதவி ஆய்வாளர் பாண்டியராஜன் என்பவர் மருத்துவமனை சென்று அ.சா.1 தங்கவேலுவை விசாரித்தபோது அவர் கொடுத்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து நிலையக் குற்ற எண்.203/2024, இதச பிரிவுகள் 294(பி), 324 இன் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே இரவு 21.00 மணிக்கு வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் தங்ககருப்பசாமி மற்றும் பழனிக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 மாதிரிவரைபடம் மற்றும் அ.சா.ஆ.5 பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.1 தங்கவேலு, அ.சா.2 பாண்டியம்மாள், செல்வராஜ், மாரீஸ்வரன், முருகன், முனியசாமி, தங்ககருப்பசாமி, பழனிக்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 03.09.2024 ஆம் தேதியன்று காலை 10.30 மணியளவில் நிலையம் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் அ.சா.1 தங்கவேலுக்கு சிகிச்சையளித்த சிவகாசி அரசு மருத்துவர் லட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துபதிவேட்டுடன் கூடிய அ.சா.ஆ.6 காயச்சான்று பெற்றுள்ளார். பின்னர் உதவி ஆய்வாளர் தனது விசாரணையின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 294(பி), 324 என்பதிலிருந்து இதச பிரிவுகள் 294(பி), 326 என மாற்றம்

செய்து அ.சா.ஆ.7 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 326 இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என சாட்சியம் அளித்துள்ளார்.

12) இவ்வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் இரு தரப்பு வாதங்கள் இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அ.சா.1 தங்கவேல், சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 பாண்டியம்மாள் ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில், எதிரி தங்களது மகன் ஆவார். எதிரிக்கும், அ.சா.1 தங்கவேலுக்கும் வாய் தகராறு ஏற்பட்டு கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் இருந்த அடையாளம் தெரியாத நபர் அ.சா.1 தங்கவேலுவை கீழே தள்ளிவிட்டதில் அவருக்கு தலையிலும், கையிலும் காயம் ஏற்பட்டது. சம்பவயிடத்தில் எதிரியும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரியின் மீது அ.சா.1 தங்கவேல் புகார் கொடுத்ததாக அரசுத்தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர். எனவே, அரசு தரப்பும் நீதியின் நலன் கருதி மற்ற சாட்சிகளை விசாரிக்கவில்லை என்பதை அறிய முடிகிறது. இருப்பினும், சம்பவத்தை நிரூபிக்கும் வகையில் வேறு யாரும் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை. அ.சா.1 தங்கவேல் மற்றும் அ.சா.2 பாண்டியம்மாள் எதிரியுடன் சமாதானமாகி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.3 தலைமைக் காவலரின் சாட்சியம் மட்டும் எதிரிக்கு எதிராக உள்ளது. எனவே, அ.சா.3 தலைமைக் காவலரின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு வழக்கு சம்பவம் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. மேலும், எதிரியின் மீதான இதச பிரிவுகள் 294(பி), 326 இன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் சரிவர நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யலாம் என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, எதிரியின் மீதான இதச பிரிவுகள் 294(பி), 326 இன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படாததால்

சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 248(1) இன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

அ) இந்த வழக்கில் சொத்துக்கள் எதுவும் இல்லை என்பதால் சொத்துக்கள் பற்றி எந்த ஒரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

ஆ) இந்த வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதி கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரத்தினை ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் இன்று 2026–ஆம் ஆண்டு ஜீன் மாதம் 06 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VIJAYA BHARATHI

Digitally signed by VIJAYA BHARATHI

நீதித்துறை நடுவர் எண்.2,
சிவகாசி.

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | தங்கவேல் |
| அ.சா.2 | பாண்டியம்மாள் |
| அ.சா.3 | மாயக்கிருஷ்ணன் (தலைமைக் காவலர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 இன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | புகார்வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ.6 | அ.சா.1 இன் காயச்சான்று |
| அ.சா.ஆ.7 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**<u>அரசுத்தரப்பு சான்று பொருள் :–</u>**

இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>** :

இல்லை.

VIJAYA BHARATHI Digitally signed by VIJAYA BHARATHI

நீதித்துறை நடுவர் எண்.2,
சிவகாசி.

**<u>பின்குறிப்பு :–</u>**

1. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் எதிரி விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.

**<u>நகல்</u>**

விருதுநகர் மாவட்ட, திருவில்லிபுத்தூர் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

VIJAYA BHARATHI Digitally signed by VIJAYA BHARATHI

நீதித்துறை நடுவர் எண்.2,
சிவகாசி.